[1973 பிப்ரவரி 28

நீடாமங்கலம் ரயில் நிலையத்தருகில் மேம்பாலம்.

186 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீடாமங்கலத்தில் ரயில்வே நிலையத்துக்கருகில் மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நீடாமங்கலம் இரயில்வே நிலையத்திற்கு அருகில் கட்டப்படும் மேம்பாலத்திற்கான மதிப்பீட்டுத் தொகையையும், அந்தப் பணி எப்பொழுது துவங்கப்பட இருக்கிறது என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் சொன்னது செயற்குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது என்பது. மத்திய அரசுக்கு இதுபற்றி அறிக்கை அனுப்பியிருக்கிறோம். அதற்குப் பிறகு முடிவு செய்யப்படும்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நீடாமங்கலத்திலே தற்போது ஏற்பட இருக்கும் அந்த இடம் அந்த ஊரின் ஒரு சிறிய கடைத் தெரு பாழாக்கப்படும் நிலையில், அந்த ஊரின் சிறப்பே குறைகின்ற நிலையில் இருப்பதால், அதற்கு ஊராட்சி மன்றத்தின் சார்பில் கொடுக்கப்படும் மாற்றுத் திட்டம் ஏற்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தை அந்தத் திட்டம் நிறைவேற்றப் படும்பொழுது பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

Price of Sugar Cane

"187 *Q*.—THIRU N.K. PALANISWAMY :

THIRU *N*. KITTPPA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government have represented to the Centre to increase the price of the sugarcane supplied to the Sugar factories in the State?